# ஈழத்தில் மின்னரசுக்கான ஏது நிலைகளும் தமிழ்த் தகவல் தொழில் நுட்பமும் [Possibilities For E Government in Eelam and Tamil Information Technology]

தங்கராஜா தவரூபன்
(வகைபபடுத்தலில் படைப்பு இலக்கு : மின்னரசு)
ஆசிரியர்,வெப்தமிழன்.கொம் (www.webtamilan.com)
வெளிவாரி மாணவன்,தகவல் தொழில் நுட்பம்,2ம் வருடம்,கொழும்பு பல்கலைக்கழகம்,இலங்கை
மின்னஞ்சல் முகவரி: <webtamilan@gmail.com>

---

[This article examines areas regarding Possibilities For E Government in Eelam and Tamil Information Technology. Hear I mentioned a name for Srilanka as "Eelam" is traditional name of our country. our people are affected by war and redeveloping their economic, technology sources and knowledge as well. Our people need financial and technical help now. Government other organizations are trying to contribute an e society in order to build up an e- government here. In conclusion We can say Eeelam is enhancing its performance on rearranging citizens and services.]

பல மைல்கற்களினைத் தாண்டி நம் அன்றாட வாழ்க்கையில் பெரிதும் செல்வாக்கு செலுத்துவதோடு மட்டுமன்றி எதிர்காலத்தில் உலகத்தின் ஒவ்வொரு மாற்றத்துக்கும் காரணமாக இருக்கப்போகின்ற தகவல் தொழில் நுட்பம் இன்று வெகு வேகமாக மனித வாழ்வியலின் ஒவ்வொரு அசைவிலும் ஊடுருவியுள்ளமை கண்கூடு.

இந்தத் தகவல் தொழில் நுட்பத்தின் படிமுறை வளர்ச்சி பற்றி இங்கு விவாதிக்கவேண்டிய அவசியம் இல்லை.ஆயினும் என்னால் கருத்தில் எடுத்துக்கொள்ளப்பட இருக்கின்ற கட்டுரைக்கருவுக்குள் செல்லும் முன்பு சில விடயங்களை இவ்விடத்தில் தெளிவுபடுத்த வேண்டிய தேவை இருக்கின்றது.

இன்று எம்முன் பரந்து கிடக்கும் தொழில்நுட்பங்கள் அனைத்திலும் மேற்சொன்ன தகவல் தொழில்நுட்பம் தான் பிரதான பங்கு வகிக்கின்றது. கணினியியல் சம்பந்தப்பட்ட இந்தத் தொழில்நுட்பத்துக்கும் ஏனைய தொழில்நுட்பங்களுக்கும் இடையில் ஒரு முக்கிய வேறுபாடு இருக்கின்றது. மனிதன் தான் பயன்படுத்தும் தொழில் நுட்பங்கள் யாவும் தனக்கு ஏற்புடையதாக இருக்கவேண்டும் எனப் பெரிதும் எதிர்பார்க்கின்றான்.அத்துடன் குறித்த தொழில் நுட்பத்தின் வழி தன்னை இயைபாக்கிக்கொள்வதை விட இந்தத் தொழில் நுட்பங்களைத் தன் தேவைக்கு ஏற்ப மாற்றியமைத்துக்கொள்வதில் கூடிய நாட்டம் செலுத்துகின்றான்.

உதாரணமாக வானொலித் தொழில் நுட்பத்தினை எடுத்துக்கொள்வோமே. இதனைப் பயன்படுத்துவதற்கு மனித இனத்தின் எந்த வகையிலான பிரிவினருக்கும் சிக்கல் இருக்கவில்லை. தனக்கு விளங்கக் கூடிய வகையில், மொழியைப் பயன்படுத்திக்கொள்ளலாம். இங்கு உள்ளீடு வெளியீடு ஆகியவை ஒன்றில் ஒன்று தங்கியிருக்கவில்லை. அதனால் இத்தொழில் நுட்பம் நுகரப்படுவதில் எவ்வித இடர்ப்பாடும் இருக்காது. ஆனால் தகவல் தொழில்நுட்பத்தில் உள்ளீடு வெளியீடுகளுக்களிடையில் நெருங்கிய தொடர்பு இருக்கின்றது. குறித்த வெளியீடு எமக்கு வேண்டுமாயின் வழங்கப்படக்கூடிய உள்ளீடு என்பதற்கு எனச் சில வரையறைகள் இருக்கின்றன. இது தான் வேறுபாடு.

இந்த வேறுபாடுதான் தகவல்தொழில் நுட்பத்தில் மனிதன் ஒவ்வொரு கட்டத்திலும் எதிர்நோக்குகின்ற முக்கிய பிரச்சினை. ஒரு தொழில் நுட்பத்தினைப் பயன்படுத்துவதற்காகப் ஒரு பொதுவான மொழியினை மனிதசமூகம் கட்டாயம் தெரிந்திருக்கவேண்டும் என்று எவரும் எதிர்பார்க்க முடியாது. எமக்காகத் தொழில் நுட்பமேயன்றி ,தொழில்நுட்பத்துக்காக நாங்கள் அல்ல.

தகவல் தொழில் நுட்பம் பெரும்பாலும் ஆங்கில மொழியாதிக்கத்தோடு வீறுநடை போட்டுக்கொண்டிருக்க அந்தத் தொழில்நுட்பத்தின் பயன்பாட்டினை மனிதசமூகத்தின் ஒவ்வொரு பிரதிநிதியும் பெற்றுக்கொள்வதற்கான முயற்சிகள் அவ்வவ் சமூகப்பிரிவுகளால் மேற்கொள்ளப்பட்டன ; மேற்கொள்ளப்படுகின்றன. இது ஒருவகையில் தகவல் தொழில் நுட்பத்தின் வளர்ச்சியில் உலகத்தின் ஒவ்வொரு பகுதியில் இருந்தானதும் பெரும்பாலானவர்களினதுமான பங்களிப்பை உறுதி செய்கிறது.

அந்த வகையில்தான் இந்தத் தமிழ்த் தகவல் தொழில்நுட்பம் என்ற விடயம் பற்றியும் இன்று நம்மிடையே பேசப்படுகின்றது. இதன்போது தான் தமிழில் கணினி, தமிழ் இணையம் என்றெல்லாம் பேசுகின்றோம். இந்த விடயம் எம்மில் பலராலும் விவாதிக்கப்படுகின்றதும் பயன்பாட்டிற்குட்படுத்தப்படுவதும் இன்று சாதாரண விடயமாகிவிட்டது. இந்நிலையில்தான் மின்னரசு பற்றி கவனம் செலுத்துகின்ற எனது இக்கட்டுரை சமர்ப்பிக்கப்படுகின்றது.

தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பத்தினைப்பயன்படுத்தி அரசாங்கம் ஒன்றின் நிர்வாக நடவடிக்கைகளை ஒருங்கமைத்தலும் பராமரித்தலும் மின்னரசாங்கம் எனக் கருத்துப்படும். மின்னரசாங்கம் பற்றியும் இதனது தாற்பரியம் பற்றியும் 2002 இல் கலிபோர்னியா தமிழ் இணைய மாநாட்டில் திரு அருண்மகிழ்நன் அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரையின் அறிமுகத்திலும் 2003 இல் சென்னையில் நடைபெற்ற தமிழிணைய மாநாட்டில் திரு ஜயராதா மற்றும் திரு சாந்தகுமார் இருவரினால் இணைந்து வழங்கப்பட்ட கட்டுரையிலும் தெளிவாகக் கூறப்பட்டிருக்கின்றது

ஈழத்தில் இன்று மின்னரசு ஒன்று இருக்கின்றதா அல்லது கட்டமைந்து வருகின்றதா? இது என்ன கேள்வி இதனை இற்றைக்கு இரண்டு மூன்று வருடங்களுக்கு முன்னர் கேட்டிருந்தால் நிச்சயமாக இல்லை என்றே பதிலிறுத்திருப்பேன். ஆனால் இன்று நிலைமை வேறு. ஈழத்தில் தமிழர்கள் தமது இழந்த உரிமைகளை மீட்டெடுக்கவெனப் போரிடத் துணிந்ததில் இருந்து நிச்சயமாக ஈழம் தகவல் தொடர்பாடல் துறையில் மட்டுமல்ல ஏனைய தொழில் நுட்பத்துறைகளில் உலகம் கண்டு வந்த முன்னேற்றங்களைப் பரவலாக்கம் செய்வதில் பெரும் சிக்கல்களை எதிர்கொண்டுவந்தது. இதற்காக இந்தத் தொழில் நுட்பங்கள் எம்மால் பயன்படுத்தப்படவில்லை என்றோ தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பத்துக்கு எம்மவரால் எந்தப் பங்களிப்பும் செய்யமுடியவில்லை என்றோ செய்யப்படவில்லை என்றோ கூறிவிட முடியாது.

போராட்ட நடவடிக்கைகளினால் தமது தாயகத்திலிருந்து புலம் பெயர்ந்த தமிழர்கள் பலரது முயற்சிகள் இன்று ஈழத்தில் மின்னரசு ஒன்றுக்கான ஏது நிலைகளுக்கு வித்திட்டிருக்கின்றது என்பதனையும் இவ்விடத்தில் நாம் மறந்து விட முடியாது. மின்னரசு ஒன்று அமைவது எவ்வளவு அவசியமோ அந்த அளவுக்குத் தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பத்தின் பயன்பாடும் பரவலாக்கமும் அவசியமானதாகும்.

வெறுமனே மின்னரசு ஒன்று நிறுவி அழகு பார்த்துக் கொண்டிருக்க முடியாது. மின்னரசு ஒன்றை நிறுவுவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் அதேவேளையில் ஒரு மின்சமூகத்தினையும்

கட்டியெழுப்பவேண்டியது அவசியமாகும். அந்த மின்சமூகத்தினைக் கட்டியெழுப்பும் முயற்சியில் ஈழம் வீறு நடைபயின்று கொண்டிருக்கின்றது என்பது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

மின்சமூகம் கட்டியெழுப்பப்படும்போது அதற்கு முக்கியமானது நாட்டுப் பிரசைகள் தகவல் தொழில் நுட்பத்திற்கு இசைவாக்கம் கொள்ளவேண்டியமையாகும் .அப்படியாயின் அவர்கள் நிச்சயம் கணணியைப்பற்றி அடிப்படை அறிவையேனும் பெற்றிருக்கவேண்டியது அவசியமாகும். ஈழத்தில் இது எய்தப்பட்டுவிட்டதா? முற்றுமுழுதாக எய்தப்படாவிட்டாலும் பகுதியளவிலேனும் எய்தப்பட்டுவிட்டது என்பதே இதற்கான பதிலாகும்.

ஒருவரின் கணினிப்பயன்பாடு என்பது எழுத்துரு, விசைப்பலகை ஆகியவற்றில் முக்கியமாகத் தங்கியிருக்கின்றது. ஈழத்தினைப்பொறுத்த வரையில் பொதுவாகத் தமிழர்களிடையில் ஈழத்தமிழர்களினால் அறிமுகப்படுத்தப்பட்ட பாமினி எழுத்துரு பெரும் செல்வாக்கு செலுத்திக் கொண்டிருக்கின்றது. அவ்வாறே பாமினி விசைப்பலகை ஒழுங்குபடுத்தலே விசைப்பலகைப் பயன்பாட்டில் முன்னணி வகிக்கின்றது

இது ஒரு சிறந்த மின்னரசு அமைவதில் தாமதத்தை ஏற்படுத்துகின்றது என்றால் மிகையாகாது.மின்னரசில் பயன்படுத்தும்போதிலென்ன மின்சமூகத்தினைக் கட்டியெழுப்பும் போதிலென்ன முக்கிய பாத்திரம் வகிக்கின்ற மேற்படி எழுத்துருவினை இன்று உலகளாவிய ரீதியில் பயன்பாட்டுக்கு உட்படுத்தப்பட்டு வரும் யுனிகோட் எழுத்துருவில் மாற்றியமைத்துக்கொள்ளவேண்டிய தேவை இருக்கின்றது. காரணம் இப்பொழுதே புதிய தொழில் நுட்பத்தினை உள்வாங்கியதான மின்னரசை நிறுவுவது எதிர்காலத்தில் பல சிக்கல்களைத் தவிர்க்க உதவும் என்பதாகும். மேலும் இவ்வாறு யுனிக்கோட் எழுத்துருக்களின் பயன்பாடு மின்னரசின் பயனாளர் இயலுமையினை உறுதிசெய்வதோடு செலவையும் குறைக்கும்.

இவ்வாறே விசைப்பலகையினை எடுத்துக் கொண்டாலும் அது தமிழ் என்றால் என்ன சிங்களம் என்றால் என்ன ஆங்கிலம் என்றால் என்ன என்று உலகளாவிய ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட தரப்படுத்தலுக்கு ஏற்புடையதும் ஈழத்தில் அங்கீகரிக்கப்பட்டதுமான விசைப்பலகை அமைப்பைப் பயன்படுத்துவது உறுதியான மின்னரசுக்கு வித்திடும்

இந்த வகையில் மின்னரசுக்கும் எழுத்துரு மற்றும் விசைப்பலகை போன்றவற்றுக்கும் ஏன் முடிச்சுப் போடுகின்றீர்கள்? இருக்கவே இருக்கிறது ஆங்கிலம். இதற்கு ஏன் குத்தி முறிகிறீர்கள்? இது சிலருடைய வாதம் இதனை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. இன்று உலகில் ஆங்கிலத்தில் தான் அநேக இணைய வழிச்செயற்பாடுகள் இருக்கின்றன. இது இணையத்தைப் பொறுத்தவரையில் பிரச்சினையில்லை. மின்னரசாங்கத்தில் ஆங்கிலம் பயன்படுத்தப்படுவதால் கூடிய விரைவில் பரவலாக்கம் செய்வது சாத்தியமாயினும், அது குறித்த ஒரு மக்கள் சமூகத்தினருக்கு மட்டுமே பயன்படும். அந்த வகைக்குள் நாம் இருந்து நோக்கும்போது இந்தத் தமிழ், சிங்களம் முதலியவற்றின் பிரயோகம் அவசியமற்றதாகவும் வீணான முயற்சிகளாகவும் தோன்றக்கூடும்.

இங்குதான் நாம் ஒன்றைச் சிந்திக்க மறந்து விடுகின்றோம். அடிப்படைக் கணினி அறிவுகூட பெற்றுக்கொள்ளாதிருக்கின்ற அல்லது அதற்கான சந்தர்ப்பம் மறுக்கப்பட்ட மக்கள் சமூகத்திற்கு என்ன தீர்வு? அவர்களுக்கு இவையெல்லாம் சுத்த சூனியம் போலத்தான் இருக்கும். அப்படியாயின் அவர்கள் நாட்டின் பிரசைகள் இல்லையா? அவர்கள் மின்னரசாங்கத்தின் குடிமக்களாகத் தம்மை மாற்றிக்கொள்ள முடியாதா?.இதை உணராதவர்களும் எமது மொழிகள் மின்னரசில் அங்கம் பெறுவதை அலட்சியம் செய்பவர்களும் ஈழத்தில் இருக்கத்தான் செய்கின்றார்கள்.

மின்னரசாங்கம் வெறுமனே கணனிப் பயிற்சி பெற்றவர்களுக்கும் உயர்,மத்தியதர வர்க்க மக்களுக்கும் மட்டுமல்ல என்பதை இலங்கை அரசாங்கமும் இங்குள்ள நிறுவனங்களும் தமது செய்பாடுகளின் மூலம் உணர்த்திவருவது நிச்சயமாகப் பாராட்ட வேண்டிய விடயமாகும். ஈழத்தினைப் பொறுத்தவரையில் மின்னரசுக்கான முன்னெடுப்புக்கள் ஒவ்வொரு கிராமத்துக்கும் பரவலாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றமையும் ஒவ்வொரு ஈழப்பிரசையும் மின்னரசில் உறுப்பினராவதற்கான அத்திவாரம் இடப்படுவதையும் அதில் எவ்வாறான மாற்றங்கள் செய்யவேண்டும் என்பதையும் தெளிவாகச் சுட்டிக்காட்ட விழைகின்றேன்.

2003ம் ஆண்டின் 27ம் இலக்கத் தகவல் தொலைத்தொடர்புச் சட்டத்தின் கீழ் இலங்கை அரசாங்கத்தின் மற்றும் உலகவங்கியின் நிதியுதவியுடன் இலங்கைத் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மை நிலையம் (ICTA) ஆரம்பிக்கப்பட்டு அதன் மூலம் நாட்டின் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் சம்பந்தமான தரப்படுத்தலுக்கான கொள்கைகள் வகுக்கப்பட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இவர்களால் முன்னோடித்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. அத்திட்டத்தில் e-தலைமைத்துவமும் கொள்கையாக்கமும் என்ற இலக்கின்கீழ் e-சமூகம், தொழில்நுட்ப நிர்மாணம், தரக்கட்டுப்பாடு, பாதுகாப்பு, தகவல் தொலைத்தொடர்பு தொழில்நுட்ப மனிதவள அபிவிருத்தி, தகவல் தொடர்பு தொழில்நுட்ப முதலீடும் தனியார்துறை அபிவருத்தியும், அரசாங்கத்தின் மீள்முன்னேற்றம், தகவல் உட்கட்டமைப்பு ஆகிய விடயங்கள் கவனத்தில் கொள்ளப்பட்டிருக்கின்றன.

இவர்களினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வெற்றிகொள்ளப்பட்ட சில திட்டங்கள் வருமாறு: கொவிஞான வழிமுறை (GGS): இது விலைகளின் ஏற்றத்தாழ்வுகளைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தினை அடிப்படையாகக்கொண்ட விவசாயச் சந்தை விலைகளை விநியோகிக்கும் செயற்பாடாகும். கையடக்கக்கருவிகள் மூலமும் வர்த்தக நிலையங்களில் அமைக்கப்பட்டுள்ள உபகரணங்களின் மூலமும் பொருட்களின் விலைகள் பெற்றுக்கொள்ளப்படுகின்றன.இவ்வாறு பெற்றுக்கொள்ளப்படுகின்ற தகவல்கள் மத்திய நிலையத்துக்கு அனுப்பப்பட்டு சந்தைகளில் அமைக்கப்பட்டுள்ள பெரிய திரைகளில் காண்பிக்கப்படுகின்றன. இவற்றை இணையத்தளத்தின் மூலமும் (www.ggs.lk) தானியங்கி ஒளிப்பதிவுக்கருவிகளுடன் தொடர்பு கொள்வதன் மூலமும் பெற்றுக்கொள்ளலாம். தம்புள்ளை மற்றும் மீகொட பொருளாதார நிலையங்களில் 2003 சனவரியில் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் அத்திட்டத்தின்மூலம் தற்போது வர்த்தகர்கள், விற்பனையாளர்கள், விவசாய உற்பத்திப்பொருட்களின் கொள்வனவாளர்கள் பயன்பெறுகின்றனர்.இது இன்னும் நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு விஸ்தரிக்கப்படவில்லை.

e-காசுக்கட்டளைகள் (e-MO): இணையத்தளத்தினை உபயோகித்துப் பொருட்களையும் சேவைகளையும் பெற்றுக்கொள்வதற்கென கடன்-அட்டைகளுக்குப்பதிலாக உபயோகிக்கக்கூடிய இலத்திரனியல் கொடுப்பனவு வழிமுறையே e காசுக்கட்டளையாகும். கொழும்புப் பல்கலைக்கழகத்தில் தகவல் தொழில்நுட்ப இளமானிப் பயிற்சிக்கெனப் பதிவு செய்து கொள்வதற்கு நாட்டின் சகல பகுதிகளிலும் உள்ள 26க்கும் மேற்பட்ட தபால் நிலையங்களில் இது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.எதிர்காலத்தில் இரண்டு பேருக்கு இடையிலான கொடுக்கல் வாங்கல்களைப் பூர்த்தி செய்யவும் மின்கட்டணம் போன்ற பாவனையாளர் சேவைகளுக்கான கட்டணங்களை பொதுமக்கள் செலுத்த உதவும் வகையில் பரவலாக்க இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. ஆயினும் ஆரம்பிக்கப்பட்ட சுமார் 26 தபால்

நிலையங்களில் தமிழர் தாயகமான வடக்கு கிழக்கில் திருகோணமலை தவிர்ந்த வேறு எந்தமாவட்டத்திலும் இத்திட்டம் ஆரம்பிக்கப்படாது புறக்கணிக்கப்பட்டமை வேதனைக்குரியது

விஸ்வஞான கேந்திரம் (VGK) என்பது பல்சேவை சமூக தகவல் மையமாகும். இத்திட்டத்தின் முதற்கட்டமாகத் தற்சமயம் மாத்தறை, எம்பிலிப்பிட்டிய, குருநாகல், நுவரெலியா ஆகிய இடங்களில் VGK நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன

அலுவலகத்திற்கு அதிகாரம் அளித்தல்: நவீன கணினிகளின் மூலம் நாளாந்த கடமைகளை அபிவிருத்தி செய்வதில் தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தை உபயோகிக்கவென 671 அரச ஊழியர்களுக்கு மாத்தளையில் பயிற்சி வழங்கப்பட்டிருக்கின்றது. இவ்வாறு பயிற்சிபெற்ற அரச ஊழியர்களின் தானியங்கிச்சேவைகளின் மூலம் மாத்தளை வாழ் மக்களும் அரசாங்கச் சேவையாளர்களும் நன்மையடைவார்கள். இத்திட்டம் குறிப்பிட்ட பிரதேசத்தில் மட்டும் செறிவாக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டமையினைத் தவிர்த்து நாடு தழுவிய ரீதியில் செய்திருக்கவேண்டும் .உலகவங்கி போன்ற அமைப்புக்களிடமிருந்து கிடைக்கின்ற நிதியுதவிகளைத் தென்னிலங்கைக்கு மட்டும் பயன்படுத்தும் போக்கே தற்போது நிலவுகின்றது. நாடுபூராகவும் குறிப்பாகப் போரினால் மிகவும் பாதிக்கப்பட்ட பிரதேசங்களிலும் திட்டங்களைச் செயற்படுத்த அரசு ஆவன செய்யவேண்டும். இவ்வாறான புறக்கணிப்புக்களும் அசமந்தப்போக்கும் தெரிந்தோ தெரியாமலோ ஒரு சமூகத்தை மின்னரசில் இருந்து தூர வைத்திருக்கவே வழி செய்யும்

இதுதவிர கடந்த ஓகஸ்ட் மாதம் கொழும்பு சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் e-சமூகம் 2004 கண்காட்சியும் மாநாடும் இடம்பெற்றது. இதில் முற்றுமுழுதாகத் தென்னிலங்கையிலிருந்து தான் நிறுவனங்களும் பாடசாலைகளும் பல்கலைக்கழகங்களும் தமது தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் சார்ந்த செயற்பாடுகளைக் காட்சிக்குவைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. எனினும் தமிழ்த் தகவல் தொழில்நுட்பத்துக்கும் ஓரளவுக்கேனும் இடம் வழங்கப்பட்டிருந்தமையை மறுக்கமுடியாது. இந்நிலை மாறவேண்டும் இதற்குப் பொறுப்பானவர்கள் இதுபற்றிச் சிந்தித்து நடவடிக்கை எடுக்கவேண்டும். நாடளாவிய ரீதியில் பங்களிப்புக்களைப் பெற்றுக்கொள்ள முயற்சி எடுக்கவேண்டும். அதற்குரிய சந்தர்ப்பங்களை வழங்க வேண்டும்

தற்போது உத்தமத்தால் பரிந்துரைக்கப்பட்டதும் தமிழக அரசால் அங்கீகரிக்கப்பட்டதுமான விசைப்பலகையினை (தமிழ்நெட்99) ஈழத்திலும் உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொள்வதற்கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. இதைவிடவும் தமிழ்,சிங்கள தகுதரக்குறியீட்டிலும் தமது தரப்படுத்தல்களையும் பரிந்துரைகளையும் உததியோகபூர்வமாக வெளியிடுவதற்கான இறுதிக்கட்ட நடவடிக்கைகள் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன. இதற்கான குழு அமைக்கப்பட்டு தனது இறுதி ஆவணத்தை அது வெளியிடுவதற்கான ஆயத்தங்களைச் செய்துகொண்டிருக்கின்றது. இந்த முயற்சி நிச்சயம் ஈழத்தின் மின்னரசுக்கான பயணத்தின் முக்கிய மைல்கல்லாகும். இக்கட்டுரையில் மேலதிக தகவல்களை அதுசம்பந்தமாக வெளியிடுவது முறையல்ல எனக்கருதி தவிர்க்கின்றேன்.

குறிப்பாகத் தமிழ்த் தகவல் தொழில் நுட்பத்தினைப் பொறுத்தவரை அது தமிழர்களுக்கே உரித்தானதும் தேவையானதுமாகும். ஈழத்தைப் பொறுத்தவரை அவர்களின் தேவைகள் மற்ற சமூகத்தினரது தேவைகளினின்றும் சற்று வேறுபட்டிருக்கின்றது. காரணம் ஈழத்தமிழர்கள் போரினால் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்தவகையில் தொடர்ந்துகொண்டிருக்கும் புறக்கணிப்புக்களினைக் கருத்தில் கொண்டும் தகவல் தொழில் நுட்பத்தில் ஈழத்தமிழர்களினை மின்னரசு ஒன்றுக்கான பாதையில் இட்டுச்செல்லும் நோக்கிலும் தமிழர்களின் தகவல் தொழில்

நுட்பம் சார்ந்த தரப்படுத்தல்களை நிர்வகிக்கவும் கொள்கைகளை வகுப்பதற்கும் ஆலோசனைகளை வழங்கி செய்பாடுகளை முன்னெடுக்கவும் என புத்திஜீவிகளாலும் தமிழ் ஆர்வலர்களாலும் அரசுச்சார்பற்ற அமைப்பொன்று நிர்வகிக்கப்படுகின்றது.

அதுதான் தமிழ்த் தகவல் தொழில் நுட்ப மேம்பாட்டுப் பேரவை(Council For Tamil Information Technology Development).அதுவே தற்போது ஈழத்தில் தமிழ்த் தகவல் தொழில் நுட்பம் சார்ந்த நடவடிக்கைகளை முன்னெடுத்துசெல்வதில் வழிநடத்துனராகச் தொழிற்படுகின்றது. இங்கு ஈழத்தில் தமிழ்மக்களினால் அங்கீகரிக்கப்பட்டதும் ஆதரவைப் பெற்றதுமான அமைப்பாக இது அறியப்படுகின்றது. தற்போது உத்தமம் போன்ற அமைப்புக்களுடன் உறவுகளை வளர்த்துக்கொள்வதிலும் நாட்டில் உள்ள தமிழ் மக்களின் தகவல் தொழில் நுட்பவளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பதிலும் கூடிய கவனம் செலுத்தி வருகின்றது.

இத்தருணத்தில் தமிழ்மக்களிடையே தகவல் தொழில் நுட்பத்தினை வளர்ப்பதற்காகச் செயல்பட்டுக் கொண்டிருக்கும் தமிழ்த் தகவல் தொழில் நுட்ப ஒருங்கணைப்பினைப் பற்றியும் கூறவேண்டும். இந்த TITA அமைப்பு 1999ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது. அந்த அமைப்பினது சேவைகளை அவர்களால் மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டங்களே பறைசாற்றுகின்றன. இலங்கையில் குறிப்பாக தமிழ்த் தகவல் தொழில் நுட்பம் சார்ந்த சமூகத்தைக் கட்டியெழுப்புவதில் கணிசமான பங்கினை இவர்கள் வழங்கியுள்ளார்கள் ; வழங்கி வருகின்றார்கள்

நாடுதழுவிய ரீதியில் பெருமளவிலான கருத்தரங்குகளை நடத்தியமை, வன்னி மாவட்டம் போன்ற பின்தங்கிய பிரதேசங்களில் கணினிப்பயிற்சியை வழங்கியிருக்கின்றமை, ஆசிரியர் அலுவலர்களுக்கான கணினிப்பயிற்சிகளை நாடுதழுவிய ரீதியில் தமிழர் பிரதேசங்களில் மேற்கொண்டமை, பெருமளவிலான கணினிப்பயிற்சி மையங்களை நிறுவி அவற்றினூடாக இலவச மற்றும் சலுகை அடிப்படையிலான பயிற்சி நெறிகளை வழங்கி வருகின்றமை. இறுதியாகக் கிளிநொச்சியில் லண்டன் சிறீ கனகதுர்க்கையம்மன் நிதியத்தின் ஆதரவில் ஆரம்பிக்கப்பட்ட இலவச சிறுவர் கணினிப் பூங்காவினை பராமரித்து வருகின்றமை ஆகிய அனைத்தும் தமிழ்த் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சமூகத்தின் வளர்ச்சிக்கு வித்திட்டுள்ளன. இத்தருணத்தில் லண்டன் சிறீ கனகதுர்க்கையம்மன் நிதியத்தினது சேவைகளினையும் பாராட்டியாகவேண்டும். அவர்களால் ஈழத்தில் தமிழ்த் தசவல் தொழில் நுட்பத்தின் வளர்ச்சிக்காகக் கணிசமான நிதி முதலிடப்பட்டிருக்கின்றது

வன்னித்தொழில் நுட்பநிறுவகமும் பின்தங்கிய அந்த மாவட்டத்தில் தகவல் தொழில் நுட்ப வளர்ச்சிக்கும் மாணவர்களிடையே தகவல் தொழில் நுட்ப அறிவைப் பெருக்குவதற்கும் தன்னாலான பங்களிப்புக்களைச் செய்து வருகின்றது. தமிழர் புனர்வாழ்வுக்கழகமும் பொருண்மிய மதியுரையகமும் அவ்வாறே தமிழர் பிரதேசங்களில் தகவல் தொழில் நுட்ப வளர்ச்சிக்கு அடிமட்டத்தில் இருந்து உதவுகின்றன. இதைவிட இங்கு குறிப்பிடாத கல்விநிலையங்களும், அமைப்புக்களும் கருத்தரங்குகளையும் கணணிப்பயிற்சிநெறிகளையும் வழங்கி வருகின்றமையானது ஈழத்தில் சிறந்த தமிழ்த் தகவல் தொழில் நுட்பச் சமுதாயம் கட்டியெழுப்படுவதற்கான சாத்தியத்தை எடுத்துரைக்கின்றன.போரால் அல்லலுற்ற எமது மக்களுக்குத் தற்போது குறைந்த செலவில் தமது கணினி அறிவை வளர்க்க உதவி வழங்கப்பட வேண்டியிருப்பதே தற்போது அவசரப் பணியாகும்.

உத்தமத்தைப் பொறுத்தவரையில் இலங்கையில் இவ்வருடம் கொழும்பில் இணையக்கருத்தரங்கை நடத்தியிருக்கின்றது. அதற்கு அதன் தலைவர் கொழும்பு வந்து சென்றார்.எனினும் அதனைப் பொறுத்தவரையில் நேரடியாகச் செயற்பாடுகளை பிராந்திய

ரீதியில் முன்னெடுப்பதை விட உலகளாவிய ரீதியில் தரப்படுத்தல் போன்ற செயற்பாடுகளிலேயே கவனம் செலுத்த முடிகின்றது. எப்படியிருப்பினும் இவ்வருடம் உத்தமத்துடன் இணைந்த இலங்கைத்தமிழ் ஆர்வலர்களின் எண்ணிககை அதிகரிப்பிலிருந்து நாம் உத்தமத்தின செயற்பாடுகளைப் பரவலாக ஈழத்தவர்கள் ஏற்றிருக்கின்றார்கள் என்று பொருள் கொள்ளலாம்.

இன்று நீர்ப்பாசனத்திணைக்களத்தின் இணையத்தளத்தின்மூலம் சேவைக்கான பாவனையாளர் கட்டணத்தைக் கடனட்டைமூலம் செலுத்தமுடியும். தொலைபேசிக்கட்டணங்களும் அவ்வாறே. ஆனால் மின்சாரக்கட்டணங்களைக் கட்டுவதற்கான ஏற்பாடுகள் இதுவரை மின்சாரச் சபையின் இணையத்தளத்தில் செய்யப்படவில்லை. ஆயினும் இங்குள்ள தனியார் வங்கிகளின் இணையத்தளங்களின்மூலமும், தானியங்கி இயந்திரங்கள் (ATM) மூலமும் மின்சாரக்கட்டணங்கள் செலுத்தப்படமுடியும். இவ்வாறான சேவைகள் அரச வங்கிகளாலும் மேற்கொள்ளப்படவேண்டும்.

இங்குள்ள அநேகமான வங்கிகள் (அரசாங்க வங்கிகள் உட்பட) தமது கிளைகளை வலைப்பின்னலில் இணைத்துவிட்டன. இவற்றின் தானியங்கி இயந்திரங்களில் தமிழ் சிங்களம் ,ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் தெளிவான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. கிராமப்பபுறங்களில்கூட தானியங்கி வங்கி நடவடிக்கைகள் பிரபல்யம் பெற்றுவருகின்றன. இருந்தபோதிலும் இணையவழி வங்கி நடவடிக்கைகளில் பங்குகொள்ளும் மக்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாகவே இருக்கின்றது. பாதுகாப்புக் குறித்த அச்சமும் தெளிவான இணைய அறிவின்மையும் மொழிப்பிரச்சினையும் இதற்குத் தடைக்கற்களாயிருக்கின்றன. வங்கிகளின் இணையவழி நடவடிக்கைகளில் மொழிப்பிரச்சினையினைத் தீர்க்க எல்லா மொழிகளிலும் எழுத்துருப்பாவனையினைப் புகுத்துவது மிகப்பெரிய சவாலாகவே உள்ளது. இது பாதுகாப்புடனும் சம்பந்தப்பட்டது என்பதே காரணம்.

இலங்கை அரசாங்கம் தனது அரச இயந்திரங்கள் பலவற்றையும் ஒரு வலைப்பின்னலில் கொண்டுவரும் செயற்பாட்டில் குறிப்பிடத்தக்களவுக்கு முன்னேறியிருக்கிறது. இலங்கை அரசின் உத்தியோக பூர்வ இணையத்தளம் (www.priu.gov.lk) மும்மொழிகளிலும் உலாவருகின்றபோதிலும் ஆங்கிலம் தவிர்ந்த மற்ற மொழிகளின் பயன்பாட்டிலும் பிரயோகத்திலும் வறுமை நிலையே காணப்படுகின்றது. எழுத்துருவைப் பொறுத்தவரையில் இன்னமும் பழைய சித்தாந்தம் கடைப்பிடிக்கப்படுவது வருந்தத்தக்கது.

இலங்கையினைப் பொறுத்தவரையில் அரசாங்கத் திணைக்களங்களில் பெரும்பாலானவை தம்மை இணையத்தில் இணைத்துக்கொண்டு விட்டன.அநேகமானவை விபரங்களை வழங்கும் தளங்களாக மட்டுமே இருக்கின்றன. அவையனைத்தும் தமது சேவைகளை இணையவழி வழங்க வழிசெய்யப்படவேண்டும். இது ஒன்றும் முடியாத காரியமில்லை. முதலில் அலுவலகங்கள் கணனிமயப்படுத்தப்படுவதே அதற்கு வழிகோலும். மேலும் பல இணையத்தளங்கள் சரியான முறையில் இயங்கவும் மறுக்கின்றன. இது திட்டங்கள் பராமரிக்கப்படுவதில் உள்ள குறைபாடுகளை எடுத்துக்காட்டுகின்றன.

குறிப்பாக வலைப்பின்னல்படுத்தபட்ட இந்த அரச நிர்வாகக்கட்மைப்புக்கள் ஊடாக ஈழத்தில் மக்கள் பெறக்கூடிய சேவைகளை நாம் இத்தருணத்தில் மறைத்து விட முடியாது. இவை இயங்குவதில் சில தொழில் நுட்பப்பிரச்சினைகள் இருந்தாலும் எதிர்காலத்தில் அவை சரிசெய்யப்படுமாயின் மின்னரசின் அங்கங்கள் வலுப்பெறும் எனத் துணிந்து கூறலாம்.

அரச வர்த்தமானி அறிவித்தல்கள், அரச சுற்று நிருபங்கள், தொலைபேசி விபரக்கொத்து, சட்ட ஆலோசனைகள், விமானச்சேவை, தொழிலாளர் நலன்காப்பு ,பொலிஸ் சேவை, தேர்தல் சேவை,

பரீட்சைத்திணைக்களத்தின் பரீட்சை முடிவுகள், இலங்கை அரசின் நாளாந்த நடவடிக்கைகள், பாதுகாப்பு நிலவரங்கள், வானொலிச்சேவை, வங்கிநடவடிக்கைள், பல்கலைக்கழகங்கள் சில பாடசாலைகள் எனப் பலதரப்பட்டவை. தமிழ், சிங்கள மொழிகள்ல் கூட இணையத்தில் இணைந்துவிட்டன. உள்ளூர் அரசக்கட்டமைப்புக்கள் பலவும் தமக்கென இணையத்தளங்களை அமைத்துக் கொண்டுவிட்டன. மருத்துவசேவை கூட தற்போது இணையத்துக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது .இது ஈழத்தில் மின்னரசுக்கான ஏதுநிலைகளினை மிகத்தெளிவாகச் சுட்டிக்காட்டுகின்றன.

இந்த இடத்தில் ஒன்றைக் குறிப்பிடலாம் அதாவது ஈழம் போராட்டத்தினால் பாதிக்கப்பட்ட நாடு. தற்போது போராட்டத்தில் ஈடுபட்ட இருதரப்பும் சமாதான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கின்றன. போராட்டக்காலத்தில் இருதரப்பும் எவ்வாறு பிரச்சாரப்போருக்குத் தகவல் தொழில்நுட்பத்தினை உபயோகித்தார்களோ அதே அளவில் சமாதான முயற்சிகளுக்கும் அதனைப் பயன்படுத்துகின்றார்கள் இதற்கு இருதரப்பினரது சமாதானப் பணியகங்களின் இணையத்தளங்களே சான்று பகரும் இது வரவேற்கத்தக்கது

அரச அலுவலகங்கள் யாவும் எவ்வளவு விரைவில் மின்மயப்படுத்தப்படுகின்றனவோ அந்தளவு விரைவில் மின்னரசுக்கான வாய்ப்புக்கள் அதிகரிக்கும் என்பது வெளிப்படை என்றாலும் இதற்கு இணைய வலைப்பின்னலில் அவை இணைக்கப்படுவதும் மின்னரசின் முழுமைத்தன்மையினை அடைய வழிவகுக்கும்.

மேலும் இணையம் மூலமாக நேரடியாகச் சேவைகள் அனைத்தையும் பெற்றுக்கொள்வதற்கு வழி வகைகள் செய்ய வேண்டும் இது ஈழத்தைப் பொறுத்தவரையில் இயலாததொன்று என்றோ, கடினம் என்றோ கூறமுடியாது. மூலதனமும் பயிற்சியும் தான் தற்போது அவசியமாகத் தேவைப்படுகின்றது. அடிமட்டத்தில் இருந்தே கணினிப்பயிற்சியினை வழங்கும் அதேவேளை தகவல் தொழில்நுட்ப ரீதியில் அலுவலகங்களை மீளமைப்பதற்கான நிதி ஒதுக்கீடுகளை ஒவ்வொரு திணைக்களமும் தமது நிதிப்பங்கீடுகளில் கவனத்தில் கொள்ளவேண்டும்

இதற்கிடையில் தனியார் நிறுவனங்களும் அமைப்புக்களும் துரிதவேகத்தில் தம்மை கணினிமயப்படுத்துவதிலும் சேவைகளைத் துரிதகதியில் நேரடியாகத் தகவல் தொழில் நுட்பத்தின் உதவியுடன் வழங்குவதில் பெரிதும் முனைப்புக் காட்டுகின்றன .நகர்ப்புறங்களின் இச்செயற்பாடுகளின் வேகம் அதிகமாகவே இருக்கின்றது.

இணையம் என்று விவாதிக்கும்போது ஒன்றைக் குறிப்பிடவேண்டும். இவ்வளவுகாலமும் ‘லீஸ்ட்’ இணைப்புக்கள் மூலமே இணையச்சேவைகள் வழங்கப்பட்டுக்கொண்டிருந்தன. தற்போது இலங்கை ரெலிகொம் நிறுவனத்ததால் ADSL எனப்படும் அதிகவீச்சமும் வேகமும் கொண்ட இணைப்புக்கள் மூலம் மிகக்குறைந்த செலவில் வழங்கப்படுகின்றது எனினும் அது பல பிரதேசங்களுக்கு விஸ்தரிக்கப்படாதிருப்பது பெருங்குறையாக உள்ளது.

தற்போது இணையச்சேவை நிலையங்கள் அதிகரித்துள்ள நிலையில் இணையச் சேவை வழங்குனர்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றது. அதற்குத் தொலைத்தொடர்புக் கொள்கைகளினை இலங்கை அரசாங்கம் மாற்றியிருப்பதே காரணமாகும். எனினும் ஒரு சில நிறுவனங்களின் ஏகாதிபத்தியம் மேவப்படவேண்டியது அவசியமாகும்.இத்துறையில் முதலீடு செய்பவர்களை ஊக்குவித்தலே அதற்கு வழிவகுக்கும். இதற்கிடையில் இலங்கைத் தொலைத்தொடர்புகள் ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் கீழ் நாட்டில் உள்ள தொலைபேசி இலக்கங்கள் யாவும் 10 இலக்கங்கள் கொண்டதாக மாற்றப்பட்டிருக்கின்றன.

நாட்டில் உள்ள அநேக செய்திப்பத்திரிகைகள் தமது பதிப்புக்களை இணையத்திலும் வெளியிடுகின்றன. தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் கூட பத்திரிகைள் உலாவருகின்றன. இங்குள்ள ஒரே முக்கிய பிரச்சனை எழுத்துரு தான். அதில் எவரும் ஒருமித்த கருத்துக்கு வரவில்லை. பழைய எழுத்துருக்களைக் கைவிடுவதில் இந்தப் பத்திரிகைகளின் இணையப்பதிப்புக்கள் என்றால் என்ன ஈழத்தில் இருந்து வெளியாகும் இணையத்தளங்கள் மற்றும் இணையச்சஞ்சிகைகளாயிருந்தால் என்ன, அவை யாவும் பின்னிற்கின்றன.

நமது ஈழநாடு என்ற யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியாகும் செய்திப்பத்திரிகையே முதன்முதவாக யுனிக்கொட் எழுத்துருவில் தனது இணையப்பதிப்பை வெளிட்டது, அதனைத் தொடர்ந்து வீரகேசரிப் பத்திரிகையும் யுனிக்கோட் எழுத்துருவுக்கு மாறிவிட்டது. எனினும் இன்றும் மற்றைய பத்திரிகைகள் யுனிக்கோட்டிற்கு மாறுவதற்குச் சற்று பின்னடிக்கின்றன இந்த நிலைமாறவேண்டும்.

ஈழத்தில் இருந்து வெளியிடப்படும் ஒருசில இணையத்தளங்கள் குறிப்பாக வெப்தமிழன்.கொம், சூரியன்.கொம் ஆகியவை யுனிக்கோட் எழுத்துருவுக்கு மாறிவிட்டன, ஆனால் புதிதாக முளைக்கும் ஈழ இணையத்தளங்களோ ஏற்கனவே நடாத்தப்படும் இணையத்தளங்களோ யுனிக்கோட் எழுத்துரு பற்றி கவனத்தில் எடுத்ததாக தெரியவில்லை.யுனிக்கோட் எழுத்துரு பற்றிய தெளிவான புரிதல் இல்லாமையே இதற்குப் பிரதான காரணமாகும். அது களையப்படவேண்டியதொன்றாகும். புதிய தொழில் நுட்பங்களை உள்வாங்குதலே ஈழத்தில் தமிழ் தகவ்தொழில்நுட்பம் கலந்த மின்னரசுக்கான முன்னெடுப்புக்களை விரைவுபடுத்தும்.

ஈழத்தினைப் பொறுத்தவரையில் ஆள்களப் பெயர்களைக் (Domains) கட்டுப்படுத்த அமைப்பு ஒன்று இருக்கின்றது (www.nic.lk) இது மிகச்சிறப்பாக நாட்டுக்குரிய ஆள்களப் பெயர்களை நிர்வகித்து வருகின்றது.

இலங்கையின் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் முக்கியதொரு திருப்பமாக இன்னும் ஒரு முக்கியமான விடயத்தைக் குறிப்பிட வேண்டும் இலங்கையின் முன்னணித் தனியார் கம்பியில்லாத் தொலைத்தொடர்பாடல் சேவை வழங்கும் தனியார் நிறுவனமான டயலொக்(இது மலேசியா ரெலிக்கொம் நிறுவனத்துக்குச் சொந்தமானது) இலங்கையின் முதலாவது நடமாடும் தொலைத்தொடர்புகள் ஆராய்ச்சி ஆய்வுக்கூடத்தை நிறுவுவதற்கான உடன்படிக்கையினை மொரட்டுவப் பல்கலைக்கழகத்துடனும் அதனது கைத்தொழில் ஆராய்ச்சி அமைப்பான யுனி-கொன்ஷல்டன்சி சேவிஸ் (UNIC) உடனும் செய்துகொண்டுள்ளது.

இதனால் என்ன பயன் ஏற்படும்? பல்கலைக்கழகத்துக்கும் தொழிற்துறைக்கும் இடையிலான கூட்டிணைப்பானது, நாட்டின் தொலைத்தொடர்பாடல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தித் தொடர்பில் புதிய சகாப்தமொன்றுக்கான அடையாளமாகக் கருதலாம். இதனனூடு இணையத் தொலைத்தொடர்புத் துறையில் ஆராய்ச்சி நடவடிக்கைகள் இங்கும் வலுப்பெறும் என நம்பலாம். கைத்தொலைபேசித் தொழிநுட்பத்திலும் அதன் பயன்பாட்டிலும் எமது நாட்டிற்கே உரித்தான தகவல் தொழில்நுட்பத்தின் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளவும் இன்னும் குறிப்பாக தமிழ் உள்ளிட்ட மொழிகளின் பயன்பாட்டை உட்புகுத்துவதற்கான வாய்ப்பும் இதனால் ஏற்பட்டிருக்கின்றது.

இதனைப் பயன்படுத்திக்கொள்ளவேண்டியது எமது மாணவர்களிகனது திறமையாகும். பொதுவாக ஆராய்ச்சி என்று வந்துவிட்டால் அதற்கானப் பொருள் பணபலம் தான் முக்கிய பிரச்சினையாக உள்ளது. அந்த வகையில் இந்த ஆய்வுக்கூடம் எமது மாணவர்களுக்குக்

கிடைத்த வரப்பிரசாதமாகும். இதிலே ஒவ்வொரு மொழி சார்ந்த மாணவர்களும் தத்தமது மொழி சம்பந்தமான நல்ல வெளியீடுகளைக் கொண்டுவர முயற்சிக்க வேண்டும்.

இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபன தமிழ்ச் சேவை தனது ஒலிபரப்பை இணையத்தில் இருந்து நேரடியாக மேற்கொள்ள ஆரம்பித்திருக்கின்றது. இது ஒரு மைல் கல் என்றே சொல்லவேண்டும். இவ்வாறான முன்னேற்றங்கள் இலங்கைத் தகவல் தொழில் நுட்பத்தில் பிரகாசமான பாதையில் சென்று கொண்டிருக்கின்றது என்பதைச் சுட்டிக்காட்டுகின்றன. அதேபோல் சக்தி பண்பலை வானொலி இலங்கையில் இருந்து உலகெங்கும் ஒலிக்கிறது. மொத்தத்தில் இங்கே ஈழத்தில் தகவல் தொழில்நுட்பம் மொழியியல் ரீதியாக முன்னேற்றப்படிகளில் சென்றுகொண்டிருக்கின்ற அதேகணத்தில் ஈழத்தமிழர்களின் குரல் உலகமெங்கும் ஒலித்துக் கொண்டிருக்கின்றது.

இங்கே ஊடகங்களைப் பொறுத்த வரையில் பத்திரிகைகளால் செய்யப்படும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த பிரச்சாரங்களுக்குக் கூடுதலாக இலத்திரனியல் ஊடகங்கள் முக்கியத்துவம் கொடுப்பதில்லை. இந்நிலை மாறவேண்டும். மக்களை வெறுமனே பொழுதுபோக்குவதைத் தூண்டுவதாக மட்டும் அன்றி அவர்களைச் சிந்திக்க வைக்கும் வகையிலும் புதிய தொழில் நுட்பங்கள் பற்றி அறிந்துகொள்ளச் செய்யும் வகையிலும்.அவர்களது உருவாக்கும் திறனை வளர்ப்பதாகவும் இலத்திரனியல் ஊடகங்களின் நிகழ்ச்சிகள் அமைய வேண்டும்.

மக்களுக்கு எது அவசியமோ அதனை வழங்க வேண்டுமே தவிர அவர்களைச் சிந்திக்க முடியாத சடங்களாக மாற்றித் தம்வழியில் இவர்களை அழைத்துச் செல்லும் வகையில் ஊடகங்கள் தொழிற்படுவதை நிறுத்தவேண்டும்.எனவே இனிவரும் காலங்களிலாவது நாடு முழுவதும் தகவல் தொழில் நுட்பக்கல்வியினை வளர்த்தெடுக்க ஈழத்து ஊடகங்கள் முன்வரவேண்டும். இங்கு கணினிச்சஞ்சிகைகள் என ஒருசிலவே வெளிவருகின்றன. தமிழில் காலத்துக்குக் காலம் வெளிவந்து பின் தொடர்ந்தும் வெளிவரமுடியாமல் இருக்கின்றவையே அதிகம். தற்போது தரமான கணினிச் சஞ்சிகைகளுக்காக அயல் நாடான இந்தியாவை எதிர்பார்த்திருக்கவேண்டிய நிலை இருக்கின்றது

இதற்கிடையில் ஈழத்தமிழர்கள் ஆவணங்களைக் காப்பதற்கும் இலத்திரனியல்படுத்தவும் என பல அமைப்புக்கள் தோன்றி மறைந்திருக்கின்றன. சில புலம்பெயர்ந்த நாடுகளில் இன்றும் இயங்குகின்றன. அந்த வகையில் ஈழத்தமிழர் ஆவணக்காப்பகம் (www.esuvadi.org) என்ற அமைப்பு தற்போது உருவாக்கம் பெற்றிருக்கின்றது. இளையதலைமுறையினரால் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் இம்முயற்சிக்கு ஆரம்பத்திலேயே பலர் ஆதரவாகவும் , சிலர் சந்தேகத்தொனியிலும் கருத்துக்களை தெரிவித்திருக்கின்றபோதிலும் இவ்வாறான ஒரு அமைப்பு இங்கு அவசியமானதொன்றாகவே நான் கருதுகின்றேன்.

அதற்குக் காரணம் இருக்கின்றது. மதுரைத்திட்டம் தமிழ் ஆவணக்காப்பகம் போன்றன செயற்பாடுகளை முன்னெடுத்துக்கொண்டிருந்தாலும் அவர்களால் ஈழத்தில் எல்லாப்பகுதிகளுக்கும் ஊடுருவுவது என்பது நடைமுறைக்குச் சற்றுச் சிக்கலானதொன்றாகும். இந்நிலையில் பிராந்திய ரீதியல் இவ்வாறான அமைப்புக்களை ஆரம்பித்தால் உலகளாவிய ரீதியிலும் நாடளாவிய ரீதியிலும் மேற்கொள்ளப்படும்; செய்றபாடுகளுக்கு வலுவூட்டப்படும் என நம்புகின்றேன்

எது எப்படியிருந்த போதிலும் ஈழத்தில் மின்னரசு ஒன்றுக்கான செயல்வடிவம் வெற்றிபெறுவதற்கு அடிப்படைக்காரணிகளில் இன்னும் பெரிதும் கவனம் செலுத்த வேண்டியிருக்கின்றது. கிராமிய மட்டத்தில் அடிப்படைக் கணினிப்பயிற்சி, ஆரம்பக்கல்வியில் கணினிக் கல்வியினைப் புகுத்தல்,

உயர்கல்வியில் ஏற்கனவே உள்ள வாய்ப்புக்களை அதிகரித்தல், எழுத்துரு விசைப்பலகை முறையில் தரப்படுத்தியவற்றை அனைவருடைய உபயோகத்துக்கும் பரவலாக்கல், இணையப்பாவனையினை ஊக்குவிப்பதற்கான ஏதுநிலைகளை ஏற்படுத்தித் தரல் ,தமிழ்,சிங்கள மொழிகளுக்கான கலைச்சொல்லகராதியில் இருக்கக்கூடிய மயக்கங்களை நீக்கி அவற்றை மக்களிடையே பரவலாக்கல், அனைத்து விடயங்களையும் கணினிமயப்படுத்தப்படுத்தலை விரைவுபடுத்தல், தகவல் தொடர்பாடல் தொழில் நுட்ப ரீதியல் ஈழத்தில் அனைத்து பிரதேசங்களினதும் மக்களினதும் பங்களிப்பை உறுதிசெய்தல் என்பன குறிப்பிடத்தக்கன.

ஈழத்தில் கிராமிய மட்டத்தில் கணினி அறிவு பூச்சியம் என்று எவராலும் கூறமுடியாவிட்டாலும் எய்தப்படவேண்டிய இலக்கு என்னவோ சற்றுத்தூரத்தில்தான் இருக்கின்றது. TITA,ICTA மற்றும் வன்னித் தொழில்நுட்பநிறுவகம், ஐக்கிய நாடுகள் உதவித்திட்டங்கள், தமிழர் புனர்வாழ்வுக்கழகம், இந்து கிறிஸ்தவ சமய சம்பந்தமான நிலையங்கள் ஆகியன குறிப்பிடத்தக்களவில் கிராமியமட்டத்தில் குறிப்பாக வறிய மாணவர்களுக்கு இலவசமான கணினிக்கற்கை நெறிகளை வழங்கிவருகின்றது. ஏற்கனவே குறிப்பிட்டபடி கிராமிய மட்டத்தில் அடிப்படைக் கணினிக்கல்வி வளர்ந்துவரும் அதேவேளையில் இன்னும் கணினியறிவு மாணவர்களுக்கு மட்டும் தான் என்றும், நமக்குச் சரிப்பட்டு வராது என்றும் எண்ணிக்கொண்டிருப்பவர்களும், கணினிகளையும் கணினிப் பயன்பாட்டையும் கண்டு வியந்து பெருமூச்சு விட்டுக்கொண்டிருப்பவர்களும் நிறையவே இருக்கின்றார்கள். கடந்த கால யுத்த அனர்த்தங்களின் காரணமாக வடக்குக் கிழக்கின் பெரும்பாலான கிராமங்களில் இந்நிலை கூடுதலாகக் காணப்படுகின்றது. போரின் கொடுமை எமது மக்களைப் பெருமளவில் அடிப்படைக் கணினி அறிவைக்கூடப் பெறுவதற்கான ஏதுநிலைகளை இல்லாமல் செய்து விட்டிருக்கிறது.

எது எப்படியிருந்த போதிலும் தற்போது நிலவுகின்ற ஒரு விதமான சுமுகநிலையில் மேற்சொன்ன பிற்பட்ட நிலையில் இருந்து கொண்டிருந்த மக்களைத் தகவல் தொழில் நுட்பம் தேடிச் சென்று கொண்டிருக்கின்றது.இதற்கு வழிவகைகள் செய்து கொண்டிருக்கும் ஒவ்வொரு அமைப்பையும் அவை அரசுச்சார்புடையதாக இருந்தாலென்ன அரசசார்பற்றவவைகளாயிருந்தால் என்ன பராட்டுவது என்பது முக்கியமானதாகும்.

ஈழத்தைப் பொறுத்தவரையில் ஆரம்பக்கல்வியில் தகவல் தொழில் நுட்பம் என்பது இப்பொழுதுதான் துளிர்விடத் தொடங்கியுள்ளது.இதுவரை காலமும் அது பூச்சிய நிலையிலேயே இருந்து வந்துள்ளது. இடைநிலைக்கல்வியில் கணினிக்கற்கை நெறிகள்; சிலகாலத்ததுக்கு முன்னரேயே ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும் போதிய வளங்கள் இன்மையினையால் வெறுமனே கணினிகளைப்பார்த்து அறிதல்மட்டுமே சாத்தியமாயிருந்தது.

தற்போது பாடசாலைகளில் இடைநிலை வகுப்பு மாணவர்களுக்கும் கணணி கற்பிக்கப்படுகின்றது. நாம் இடைநிலைக் கல்வியினைத் தொடர்ந்து கொண்டிருந்த காலப்பகுதியில் எல்லாம் கணினிக்கூடம் என்று ஒன்று பாடசாலையில் இருக்கவில்லை. உயர்கல்வியினைத் தொடர்ந்த போது கணினிக்கூடத்தைப் பார்க்கக்கூடிய வசதி கிடைத்தது.ஆனால் பயன்படுத்தும் வசதி அரிதாயிருந்தது. அக்காலப்பகுதியில் வடக்கு கிழக்கு உள்ளிட்ட பல பின்தங்கிய பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் கணினிகள் கொண்டுவரப்பட்டு அறைகளுக்குள் பயன்பாடின்றி முடங்கிக்கிடந்தன. சில இடங்களில் ஒரு சிலரது தனிப்பட்ட பாவனைகளுக்கு மட்டும் உட்படுத்தப்பட்டிருந்தன.

இவற்றுக்கெல்லாம் முக்கியக்காரணமாகக் கணினிக்கல்வியைப் பெற்றவர்களின் எண்ணிக்கை இங்குக் குறைவாக இருந்தமையும், கணனிக்கல்வியானது பரீட்சையினை மாத்திரமே இலக்காகக் கொண்ட எமது கல்விச் செயற்பாடுகளில் அவசியமில்லாமலிருந்தமையும், இந்தக்

கணனிக் கற்கைநெறிகளைப் பயிற்றுவிப்பதற்குத் தேவையான ஆளனிகள் அரசாங்கத்தினால் வழங்கப்படாதிருந்தமையும் காரணங்களாகக் கொள்ளலாம். அதன்போது சில முன்னணிப் பாடசாலைகள் தமது சொந்த செலவில் ஆசிரியர்களை பணிக்கமர்த்தியிருந்தன.

இந்தநிலை இன்றும் பல பாடசாலைகளில் தொடர்கின்ற போதிலும் முன்னர் இருந்தவாறான நிலை இல்லை என்றே கூறவேண்டும். இடைநிலைக்கல்வியினைப் பயிலும் மாணவன் ஒருவன் பாடசாலையிலேயே தனது கணினிக் கல்வியினை ஆரம்பிக்கக்கூடிய சாத்தியப்பாடு இருக்கின்றது. உயர்தரக்கல்வியில் கணினிக்கல்வியானது பொதுத்தகவல் தொழில்நுட்பம் என்ற பாடப்பெயரில் கட்டாயமாக்கப்படுகின்றது. இது சில வருடங்களாக இழுபறிப்பட்டு இப்போதுதான் சாத்தியமாக்கப்பட்டிருக்கின்றது. இது மேம்படுத்தப்படவேண்டும். இந்நிலையிலும் ஒருகணினிகூட இல்லாத நிலையில் எத்தனையோ பாடசாலைகள் இருப்பதும் மனவருத்தத்திற்குரியது.

போரின் அவலங்களினால் சிதைவுற்று பலபாடசாலைகள் அகதிமுகாம்களாகவும் இராணுவ முகாம்களாகவும் இருக்க ,இன்னும் தமக்கான இடவசதிகளைக்கூட இழந்த நிலையில் ஓலைக்கொட்டகைகளில் மரநிழல்களின்கீழும் இயங்குகின்ற பாடசாலைகள் குறிப்பாக வடக்கு கிழக்குத் தமிழர் தாயகப்பகுதிகளில் இருப்பதை நாம் மறைத்துவிடவோ மறந்து விடவோ முடியாது. இது நம்புவதற்குக் கடினமாயிருந்தாலும் உண்மை. இங்கு தகவல் தொழில்நுட்பக்கல்வியினைக் கொண்டுசெல்வது முக்கியமான சவால் என்றாலும் அதனைச்செய்தேயாகவேண்டும். அவர்களிடம் போய் எவ்வாறு மின்னரசுபற்றி எடுத்துரைப்பது? இவர்ககளைப் புறந்தள்ளி விடமுடியாது. இன்று நிலவும் ஒருவிதமான சுமுக நிலையில் தகவல்தொழில்நுட்பத்தினைப் புகுத்துவதற்கான வழி திறக்கப்பட்டிருக்கின்றதேயன்றி மின்னரசில் இவர்களை இணைப்பதற்கான ஏதுநிலைகள் இரண்டாம் கட்டத்தில்தான் உள்ளன.

இங்கெல்லாம் முதலில் தகவல்தொழில்நுட்பத்திற்கான ஏதுநிலைகளை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும். இதன்மூலம்தான் ஈழத்தில் முழுமையான மின்னரசு ஒன்று நிறுவப்படக்கூடிய சாத்தியம் இருக்கும். இன்னமும் இக்கல்வி சென்றடையாத இடங்களில்கூட இதனை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கும்போது ஆரம்பக்கல்வியிலேயே அதனைப் புகுத்துவது பற்றி அரசாங்கம் மிகுந்த கவனம் செலுத்தவேண்டிய தேவை ஒன்று இருக்கின்றது.

இவ்விடத்தில் எம்மையெல்லாம் மெய்சிலிர்க்க வைக்கக்கூடிய வகையில் போரினால் பெரிதும் பாதிக்கப்பட்டு மிகவும் பின்தங்கியுள்ள தமிழ் மாவட்டமான கிளிநொச்சி மாவட்டத்தில் அண்மையில் இலவசக் கணினிக் கூடம் ஒன்றை ஆரம்பித்திருக்கின்றனர். இந்தச் செய்தியினை அறிந்தபோது நான் உண்மையிலேயே பேரானந்தம் அடைந்தேன். ஈழத்தில் மின்னரசு ஒன்றும் எட்டாக்கனியல்ல தமிழ்த் தகவல்தொழில் நுட்பம் வெற்றிநடைபோடவும் மிகச்சிறந்த மின்சமுதாயம் ஒன்று கட்டியெழுப்பப்படுவதுக்குமான அத்திவாரம் தமிழர் தாயகத்தில் இடப்பட்டிருப்பது யாருக்குத்தான் மகிழ்வைத்தராது? இது போன்று நூற்றுக்கணக்கில் நிலையங்கள் நாடு முழுவதும் அமைக்கப்படவேண்டும் அதற்கு அரசாங்கம் தான் வழிவகைகளைச் செய்யவேண்டும்.

அதைவிடுத்து வெறுமனே தலைநகரில் மாநாடுகளையும் கண்காட்சிகளையும் வைத்து நாட்டில் மின்சமுதாயத்தை கட்டியமைத்துவிடலாம் என்று கனவு கண்டுவிடமுடியாது. இதனை ஓரளவுக்காவது அரசாங்கம் உணர்ந்ததால் என்னவோ ICTA ஊடாகச் சில செயற்பாடுகளை ஆரம்பித்திருக்கின்றது. இவற்றிலும் வடக்குக்கிழக்கு மாவட்டங்களைப்பொறுத்தவரையில் புறக்கணிப்பு நிகழ்ந்துள்ளது என்பதே எனது பொதுவான கருத்து.

பல்கலைக்கழக மட்டத்தில் தகவல்தொடர்பாடல் கல்வியானது ஆரம்பத்திலிருந்ததைவிட இப்பொழுது எவ்வளவோ முன்னேறிவிட்டது. மாணவர்கள் அவர்கள் எந்தத்துறையில் கல்விபயின்றாலும் கணினி ஒரு பாடமாகக்கப்பட்டிருக்கின்றது. ஆராய்ச்சிமட்டத்தில் தகவல் தொழில்நுட்பத்தினை அணுகும் மாணவர்களின் எண்ணிகை குறைவாக இருக்கின்றது. வெறுமனே பரீட்சையினை மையமாகக் கொண்டதாகவே இவர்களின் நடவடிக்கைகள் இருக்கின்றன. இன்று தகவல் தொழில்நுட்பத்தில் கொழும்புப்பல்கலைக்கழகமும் மொரட்டுவ,பேரதானைப்பல்கலைக்கழகங்களும்தான் முன்னணியில் திகழ்கின்றன. ஈழத்தில் மின்னரசுக்கான முயற்சிகளில் இவர்களின்பங்கு தான் மேலோங்கி இருக்ககின்றது. இதற்காக மற்ற பல்கலைக்கழக மாணவர்கள் இயலாதவர்கள் என்று ஒருபோதும் கூறிவிட முடியாது.

அவர்களுக்கான வளங்களும் சந்தர்ப்பங்களும் இதுவரை வழங்கப்படவில்லை என்றோ மறுக்கப்பட்டன என்றோதான் கூறவேண்டும். இவர்களது திறமைகள் இனிவரும் காலங்களில் வெளிப்படக்கூடும். என்னைப்பொறுத்த வரையில் தத்தமது பிரதேசங்களில் தகவல்தொழில்நுட்பக்கல்வியை முழுமைப்படுத்துவதற்கும் அதன்மூலம் மின்னரசுக்கான ஏதுநிலைகளை ஏற்படுத்தவும் இவர்களால் பாரியளவில் பங்களிப்பு செய்யமுடியும் என நம்புகின்றேன். அது அவர்களின் கடமையும் ஆகும்

அதுநிற்க மின்னரசு பற்றிப் பேசவந்த எனது கட்டுரை பெருமளவில் ஈழத்தில் தமிழ்த் தகவல் தொழில் நுட்பம் பற்றியே கூடிய கவனம் செலுத்தியிருப்பதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. மின்னரசு ஒன்று நிறுவப்படவேண்டும் எனின், மின் சமூகம் ஒன்று கட்டியெழுப்பப்பட வேண்டுமாயின் முதலில் அடிப்படையான தகவல் தொழில்நுட்ப அறிவைத்தானும் மக்கள் பெற்றிருக்க வேண்டும் அதற்கான வாய்ப்புக்கள் வழங்கப்பட வேண்டும். அதனைக்கருத்தில் கொண்டு தான் அதுபற்றி கூடிய கவனம் செலுத்தினேன்.

அதைவிடுத்து அரசுச்சேவைகளை வெறுமனே இலத்திரனியல் மையப்படுத்துவதால் எவ்விதப் பயனுமில்லை அல்லவா?. எது எப்படியோ ஈழத்தில் தற்போது தகவல் தொழில் நுட்பம் முன்னேற்றப்பாதையில் சென்றுகொன்டிருக்கின்றது. அந்தப்பாதையில் பல தடைக்கற்கள் இருக்கின்றன இவற்றைக் களைந்து பாதையினைச் செப்பனிட்டுச் சென்றால் ஈழத்தில் உறுதியான மின்னரசு அமைவது விரைவில் சாத்தியமே.